உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.93/2025

| | |
|---|---|
| பெயர் | :முரளி(அ.சா.1) |
| தகப்பனார் பெயர் | :கண்ணன் |
| கணவர் பெயர் | : |
| வயது | :23 |
| கிராமம் | :செம்பியனேந்தல் |
| வட்டம் | :மதுரைகிழக்கு |
| தொழில் | :கூலிவேலை, கட்டிடதொழில் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

08.06.2026

முதல் விசாரணை:

ஆஜர் 2 எதிரிகள் பாலகிருஷ்ணன் என்ற குட்டி, பழனிவேல்ராஜன் ஆகியோரை தெரியுமா என்றால் தெரியாது. எதிரிகள் குணாளன், அழகேஸ் என்ற அழகர், சத்திமுருகன், அருள் என்ற அருள்முருகன் ஆகியோர் கணினி மூலமாக ஆஜர்படுத்தப்பட்டு, அடையாளம் கேட்கப்பட்டது,சாட்சி அவர்களை பார்வையிட்டு தனக்கு தெரியாது என்று கூறுகிறார். சாட்சியிடம் புகார் வாக்குமூலம் காட்டப்பட்டு, அதை தான் மதுரை அரசு ராசாசி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது எழுதப்பட்டது என்றும் அதை தான் எழுதவில்லை என்றும் ஆனால் கையெழுத்து மட்டும் போட்டதாக சாட்சி ஒப்புகொள்ளவே மேற்படி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார் வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் நான் கூறி தான் எழுதப்பட்டதா என்றால் தெரியவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

எனக்கு எழுத படிக்க தெரியும். கடந்த 21.05.2024ம் ஆண்டு மதியம் சுமார் 2.00 மணியளவில் அயிலாங்குடி, AP டவுன்சிப் பிளாட்டில் உட்கார்ந்து நானும், கௌதம், சக்திவேல், முனியசாமி, அய்யாகண்ணு, சௌந்தர் ஆகியோர் மது அருந்தி கொண்டிருந்த போது, அங்கே ஆஜர் 1ம் எதிரி பாலகிருஷ்ணன் என்ற குட்டி, மற்றும் 2ம் எதிரி ரூபன் ஆகியோர் மது அருந்தி கொண்டிருந்த போது, எங்களுக்குள்ளாக ஏற்பட்ட தகராறில் எனது நண்பர் கௌதம், அங்கு நின்று கொண்டிருந்த இருசக்கர வாகனத்தை வாளால் கிழித்த போது, எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் அப்போது ஆஜர் 1ம் எதிரி பாலகிருஷ்ணன் என்ற குட்டி அவதுாறான அசிங்கமான வார்த்தைகளை பேசி என்னுடைய ஊரில் வந்து வம்பு இழுக்கிறாயா என்று கேட்டு, ஒருத்தர் கூட ஊர்திரும்ப மாட்டீர்கள் என்று மிரட்டி போன் மூலமாக தன்னுடைய நண்பர்களான மற்ற எதிரிகளுக்கு தகவல் கொடுத்த போது, நானும் எனது நண்பர்கள் கௌதம், மற்றும் சிலர் எதற்கு வீண் விவாகாரம் என்று கூறி பட்டளம் ஊரைத்தான்றி நின்று பேசி கொண்டிருந்த போது ஆஜர் எதிரிகள்அனைவரும் அங்கே வந்து 1ம் எதிரி என்னிடமே மேரிடித பார்க்கிறாயா என்று கூறி கத்தியால் என் தலையில் ஓங்கி வெட்டினார் என்றும் நான் ஒதுங்கிகொள்ளவே அது என் உதடில் பட்டு ரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், வெட்டுவதை எனது இடது கை கொண்டு தடுக்க முற்பட்ட போது, நடுவிரலும், மோதிரவிரலிலும் பட்டு ரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், 2ம் எதிரியான ருபன் வாளால் வண்டியின் உடைய இருக்கையை கிழித்தது நீ தானா என்று கௌதமை பார்த்து கூறி அசிங்கமான வார்த்தைகளால் கூறி கழுத்தை நோக்கி வெட்ட முற்பட்டதாகவும் அதை கௌதம் தடுக்க முற்பட்ட போது, இடது கை மணிக்கட்டில் வெட்டுக்காயம் ஏற்பட்டதாகவும் மீண்டும் தலையை நோக்கி வெட்ட முற்பட்ட போது, கௌதமின் வலதுபுறங்கையில் பட்டு கொடுங்கயாம் ஏற்பட்டதாகவும் அதை பார்த்து விலக்க வந்த முனிசாமியை ஆஜர் 1ம் எதிரி

பாலகிருஷ்ணன் என்ற குட்டி தனது கையில் வைத்திருந்த கத்தியால் வலது பக்க தலையில் வெட்டி அவருக்கு ரத்தக்காயத்தை ஏற்பட்டியதாகவும், அதை தடுக்க முற்பட்ட என்னையும், ஆஜர் எதிரிகளான பழனிவேல்ராஜன், கம்பாலும் மற்ற எதிரிகள் கையால் மாறி மாறி என்னை தாக்கியதாகவும், நான் வண்டியை அங்கேயே போட்டுவிட்டு தப்பித்து ஓடிச்சென்று மருத்துவமனையில் சேர்ந்ததாகவும், அப்போது ஆஜர் எதிரிகள் 10 நபர்களும் என் இருசக்கர வாகனத்தை அடித்து நொறுக்கியதாகவும், எனக்கு உடல்முழுவதும் அடித்து பல ரத்தக்காயங்களை ஆஜர் எதிரிகள் ஏற்படுத்தியதாக அரசு ராசாசி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது ஒத்தக்கடை காவல்நிலையத்தார் புகார் வாக்குமூலம் என்னிடம் பெற்று அதில் நான் கையெழுத்து செய்து தற்போது ஆஜர் எதிரிகளுடன் ராசியாகிவிட்டு உண்மைக்கு புறம்பாக பிறழ்சாட்சியாக பொய்சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.06.08 21:45:56 +0530

Assistant Sessions Judge

Melur